J. R. T. S.] GENERAL SERIES. [No. 17.

## Swearer's Prayer, or Kind Advice.

[Showing the folly and wickedness of profane swearing, with several anecdotes narrating the awful judgments of God that have fallen on swearers.]

# நேசபுத்தி.

ஆணையிடுவதினாலுந் திட்டுவதினாலும் வரும் பாவக்கேட்டைக் காட்டியது.

சனங்களே, ஆணையிடுகிறதுந் திட்டுகிறதும் பாவமென்பதை நினையாமல் நீங்கள் உங்கள்பழக்கத்தின்படி ஆணையிடவென்கிலுந் திட்டவென்கிலுஞ் சற்றேனுங் கூசாதவர்களாயிருக்கிறீர்கள். ஆனபடியினாலே நீங்களிடுகிற அந்தந்த ஆணைக்கும் நீங்கள் திட்டுகிற அந்தந்தத் திட்டுக்குங் கருத்தின்னதின்னதென்று நீங்கள் விசேஷமாக உற்றுப்பார்க்கவேண்டியது.

நீங்கள் ஆணையிடுகிறதுந் திட்டுகிறதும் முதலாவது அதினுடைய பொருக்கருத்திலே சருவ வல்லவராகிய மகிமையுள்ள கடவுளை அவமதித்து அவரை நிந்தனை பண்ணுகிறதாய் முடியும். இரண்டாவது நீங்கள் செய்யும் பாவங்களுக்காக உங்களை ஆக்கினை பண்ணாமல் அவைகளை உங்களுக்குப் பொறுத்துவிட வேண்டுமென்று தாழ்மையாக அவரைப்பார்த்து மன்றாடி

3d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [10,000.
1842.

க் கேட்கிறதைவிட்டு நீங்கள் ஆணையிடுகிறதினாலே பாவத்தைச் செய்கிறதுமல்லாமல் அதற்காக இன்னஇன்ன விதமான ஆக்கினையை வரப்பண்ண வேண்டுமென்று துணிவாக அவருடனே சொல்லுகிறதாகவு மிருக்கும். எதினாலேயென்றாற் கண்ணாணையென்று ஆணையிடும்பொழுது நான் சொல்வது உண்மைதப்பாகில் தம்பிரான் என் கண்கெட்டுப்போகப் பண்ணுவாராகவென்றுந், தாயாணையென்று சொல்லும்பொழுது நான்சொல்வது பொய்யாகில் எனது தாயை நான் இழந்துபோகப் பண்ணுமென்றும், கத்தாவைச் சுட்டிச் சொல்லுகிற கருத்தாயிருக்கும். அப்படியே எந்தெந்தக் காரியத்தைக் குறித்துச்சொன்னாலும் அதற்கு அதற்கு அப்படி அப்படியே கருத்துண்டாயிருக்கும்.

ஆணையிடுகிறதினாலே பலபல கேடு உங்களுக்கும் உங்களை அடுத்தவர்களுக்கும் வருகிறதற்கு ஏதுப் பண்ணிக்கொள்ளுகிறதும் உங்கள் கண்முதலான அவயவங்களுக்கு ஊறுவருகிறதும் உங்கள் பிதாமாதாமுதலிய உற்றாருக்குத் தெய்வசாபம் வந்து பலிப்பதும் உங்களுக்கு நலமோ?

மெலும் பாம்பு கடிப்பாயென்றும், மக்கள் மனிதரைத் தின்பாயென்றும் உங்களிற் சிலர் திட்டுகிறார்களே, அதின் கருத்துப் பாம்புகடித்து நீசாகவேண்டுமென்றும், உன் பிள்ளைகளையும் உனது உற்றமனிதரையும் நீயே வாயிலிட்டுத் தின்றதுபோலத் தொலைத்துத் துணையற்ற

ஏழையாயிருக்க வேண்டுமென்றும் விரும்பினதாய் முடியும். ஐயோ! இவ்விதமான கொடிய எண்ணங்களைக் காட்டுகிற திட்டுகள் உங்கள் வாயிலிருந்து வெளிப்படும்பொழுது உங்களுடைய மனம் எவ்வளவு கொடுமையும் எரிச்சலும் ஆங்காரமுங் கோபமுமுள்ள தாயிருக்கின்றதென்பதை யெண்ணிப் பாருங்கள். பிறருக்கு இப்படியான தீமைகள் வரவேண்டுமென்ற மனங்கொண்டு அவர்களை வாயினாலே திட்டுகிற நீங்கள் இராசபயம் இல்லாதிருந்தால் உங்கள் கையினாலேதானே ஒரு ஆயுதத்தை எடுத்துக் குத்தி வெட்டி அவர்களைக் கொன்றுபோடவும் மனமுள்ளவர்களாய் இருப்பீர்கள். கோபங்கொண்டு ஒரு ஆயுதத்தையெடுத்து ஒருவனை வெட்டிக்கொல்லுகிறவனுக்கும் உங்களுக்கும் வித்தியாசமென்ன? அவன் வலிமையுள்ளவனாய் இருப்பதினாலே பின் வரப்போகிற பழிபாவம் யாதொன்றையும் பாராமல் ஒருவெட்டிலே கொன்றுபோடுகிறான். நீங்களும் அப்படியே செய்யவிரும்பியுந் தத்துவக் குறைச்சலினாலும் இராச பயத்தினாலும் அதைவிட்டு இவ்விதமாகத்திட்டுகிறீர்கள். கத்தியினாலே வெட்டிக் கொல்லுகிறவன் தத்துவமுள்ள கொலைபாதகன். இப்படியே திட்டுகிற நீங்கள் தத்துவமில்லாத கொலைபாதகர். மேலும் உற்றுப் பாருங்கள் நீங்கள் திட்டுவதினாலே உங்கள் மேலும் உங்களுக்கடுத்தவர்கள் மேலுந் தீங்கை வரப்பண்ணுகிறீர்கள். எவ்வளவெவ்வளவாக நீங்கள் திட்டுகிறீர்களோ அவ்வளவவ்வளவாகத் தீ

மையும் உங்களுக்கு வரும். அதுவொன்றும் உங்களுக்குத்தோன்றாமல் ஒருநாளில் எத்தனைமுறை பராபரனைக் கோபமூட்டி உங்கள்மேற் கேடுவரப் பண்ணுகிறீர்கள். பராபரனோ நீங்கள் இவ்வளவான அடாமைகளைச்செய்தும் உங்களை இதுவரைக்கும் அழித்துப் போடாமல் இரக்கத்தினாலே பொறுத்திருக்கிறார். அது எவ்வளவாச்சரியம்! "பராபரன் உங்களிடத்திற் கொண்ட தயவின்மேலும் பொறுமையின்மேலும் வானங்கள் அதிசயப் படுவதாகப் பூமி ஆச்சரியப் படுவதாக.

பிரியமானவர்களே பராபரன் நீங்கள் திட்டுகிற திட்டைக் கேட்டமாத்திரத்திலே உங்களை நரகத்திலே தள்ளிப்போடாதிருப்பதற்காக அவருக்கு நன்றி உள்ளவர்களாய் நடந்து உங்கள் நாவிலே ஒருபொழுதும் ஆணையென்கிலும் திட்டென்கிலும் வராமற் கர்த்தாவினது தன்மையான துதியே உங்கள் வாயில் வரவேண்டியது. உங்களுடைய ஆணை திட்டுமுதலான எந்தப்பாவங்களையுந் தீர்க்கத்தக்கதாகப் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்த இயேசுநாதரிடத்தில் மனந்திரும்பிக் குணப்படுங்கள். அப்பொழுது அவர் உங்கள் ஆணைகளினாலுந் திட்டுகளினாலும் வந்த பாவம் எண்ணடங்காததாயிருந்தாலும் அவைகளையெல்லாம் கிலிர்த்தியாக்கி நித்திய சந்தோஷத்தை உங்களுக்குத் தந்து இரட்சித்துக்கொள்ளுவார். ஆ! இப்படியே தயவாயுங்களை இரட்சிக்கத்தக்க இரட்சகரைப் பற்றிக்கொண்டு உங்கள் பொய்யாணைகளையுந் திட்டுக்

களையும் விட்டு உள்ளத்தை உள்ளதென்றும் இல்லதை இல்லையென்றும் சொல்லி அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பராபரன் உங்களுக்குக் கிருபை செய்வாராக.

---

*இப்படியே ஆணை இட்டு முதலான தீயவார்த்தைகளைப் பேசின சிலருக்குப் பராபரன் கையோடே வரப்பண்ணின தீங்குகளைப் பாருங்கள்.*

---

முதலாவது

ஒரு ஊரிலே ஒருவன் சேவற்கட்டுகிறதிலே மிகுதியும் பிரியமுள்ளவனாய் அதிலே வெகு பணங்களைத் தோற்றுப்போனதினாலே ஒருநாள் தான் இனி ஒருபொழுதும் சேவற்கட்டுகிறதில்லையென்று ஆணையிட்டுப் பின்னும் உறுதியாக இனிநான் அப்படிச்செய்தால் பராபரன் என்னை நித்திய நரகத்திலே போட்டு வேதனைப் படுத்துவாராக, பசாசு என்னை அவ்விடத்துக்கு இழுத்துக்கொண்டு போவதாகவென்று சொல்லி இந்த நியமப்படியே இரண்டுவருஷமாகச் சேவற்கட்டுகிறதை விட்டிருந்தான். பின்பு பசாசு அவனுக்குள்ளே புகுந்ததினாலே ஒருநாட் சேவற்கட்டுக்குப்போய் அங்கே ஒரு சேவலைக் குறித்துத் தனது தோழரிலொருவனுடனே இதற்கு நீ மூன்றுசிலிங்கு பந்தயம் பிடிக்கில் நான் நாலுசிலிங்குபிடிப்பேனென்று சொல்லித் தன் சட்டைக்குள்ளே கையை வைத்துக் காசெடுத்த மாத்திரத்திலே சடுதியாய் நிலத்தில் விழுந்து இறந்துபோனான்.

---

## இரண்டாவது.

௲௮௱௨௯ ஆண்டு. ஆனி௴. லொண்டனென்னும் இராச பட்டினத்துக்குச் சேர்ந்த ஒரு இடத்திலே இருந்த வாலிபனொருவன் தன் எசமானுடைய காணியுழுகிறபொழுது அவன் பூட்டியுழுத குதிரைகள் சுறுக்காய் நடவாததினாலே திட்டி மிகுந்த கடுமையாய் அடித்தான். அதற்கும் அந்தக் குதிரைகள் நடவாததைக் கண்டு மிகுந்த எரிச்சலுங் கோபமுமுள்ளவனாய்த் தலையின் மயிரையும் பிடுங்கிக்கொண்டு கர்த்தாவை நொக்கி ஆண்டவரே, இப்படியே நான் வருத்தப்படாமல் என்னுடைய கால் கைகளைச் சூம்பப்பண்ணிப்போடுமேன் என்றுசொன்னான். உடனே அவனுடைய தியவாக்கின்படி அவனுடைய கையுங் காலும் வழங்காமற் போய்விட்டது.

---

## மூன்றாவது.

சீமரிலட்டென்னும் ஒரு பெண்ணானவள் ஒரு வெள்ளி அகப்பையைக் களவாக வெடுத்துவைத்துக்கொண்டு தன்னுடைய தாய்கேட்க இல்லையென்று மறுத்துச் சத்தியம்பண்ணி நான் அதையெடுத்தால் இப்பொழுதுதானே பராபரனுடைய தீர்வை என்மேல் வருமென்று சொன்னாள். சொன்னவுடனேதானே சோர்ந்து விழுந்து சடுதியாய் இறந்துபோனாள். களவுபோன வெள்ளியகப்பையும் அவளுடைய மடியிலேதானே யிருந்தது. அவளுடைய மரணத்தைக்குறித்து விசாரித்த நடுநீதிக்காரரும் அவ

ளுக்குச் சம்பவித்தகாரியந் தெய்வச்செயல்தானென்று தீர்த்தார்கள்.

இந்தக் காரியம் இங்கிலாந்து தேசத்தில் ௲அ௱௨௰அ. ஆண்டு பங்குனி மீ. அச்சுப்பதிக்கப்பட்டஒருபுத்தகத்திலிருந்தெழுதப்பட்டது.

---

நான்காவது.

அமேரிக்காத்தேசத்துக்குக் கிழக்கே ஒரு தீவிலொரு பெரிய மலையடிவாரத்திலே எப்பொழுதும் ஆணையிடுகிறவளுந் திட்டுகிறவளுமான ஒரு கைம்பெண் குடியிருந்தாள். அவளிருந்த வீட்டுக்கு மேலாக அந்த மலையிற் சிகரஞ் சாய்வாக வளர்ந்து நின்றது; அவள் ஒரு நாள் ஒரு காரியத்தைப்பற்றி நாணிதிலே பொய் சொன்னால் இந்த மலையிடிந்து என் தலையிலே விழுமென்று சொல்லித் திட்டினாள். இப்படியவள் திட்டிச் சிலநாட்சென்றபின் ஒரு இராத்திரியில் அந்த வீட்டு விசாரிப்புக்காரனும் உருமத்தினாலே அவ்விடத்தை விட்டு அப்பாற்போக இவள் தனித்திருக்கிற சமயத்திற் பூமியதிர்த்தலுண்டாய் அந்த வீட்டின்மேலே சாய்வாக வளர்ந்து நின்ற மலைச் சிகரம் இடிந்து விழுந்து அந்த வீட்டுக்குட்படுத்திருந்த அந்தக் கைம்பெண்ணை நசுக்கிப்போட்டது. அதினாலே இந்த நாளிலும் அந்த மலையடிவாரத்தைக் காணும்பொழுது சனங்கள் அப்படிப்பட்ட பேச்சுக்கு அஞ்சுகிறார்கள்.

---

ஐந்தாவது.

ஆணையிடுகிறதற்குந் திட்டுகிறதற்குஞ் சற்றும் அஞ்சாதவனான ஒருவன் ஒருநாள் ஒரு எசமானிடத்தில் நின்று வேலை செய்து மத்தியானம் வீட்டுக்குப் போய்ச் சாப்பாடு முடியச்சற்றுத் தாமதப்பட்டுப்போனதினாலே தன் மனையாட்டியுடனே மிகுந்த எரிச்சல் கொண்டவனாய்த் தெய்வமே இனி நான் இந்த வீட்டுக்குத் திரும்பி வராமற் பண்ணுமென்று திட்டிக்கொண்டு தான் முன்னின்று வேலைசெய்த இடத்துக்குப் போய் ஒரு வீட்டுவாசலிலே இருக்கிற பொழுது வீட்டின்மேலே ஒரு இடிவிழுந்து அவனிலுந் தாவினதினாலுடனே இறந்துபோனான்.

ஆறாவது.

சிலகாலத்துக்கு முன் ஒருவன் ஒரு கற்பாரிலே சுரங்கம் அறுத்து அதிலே வெடிமருந்து போட்டு மண்கட்டை அடிக்கிறபொழுது வேறொரு காரியத்தைக் குறித்து மற்றொருவனுடனே நான் இதிலேயாதொரு பொய் சொன்னதுண்டாகில் தெய்வத் தீர்வையாக என் கண் கெட்டுப் போமென்றான். உடனே அந்த வெடிமருந்திலே நெருப்புப் பற்றிச் சீறி அவனுடைய கண்ணிலே அடித்ததினாலே அவனுடைய கண் கெட்டுப்போனது.

ஒருவன் நாள்தோறும் சத்தியம்பண்ணுகிறவனாயிருந்து பின்பு அதைவிட்டு நல்லவனாகச் சீர்ப்பட்டது.

ஒரு ஊரிலே ஒருவன் பலநாளுஞ் சத்தியம் பண்ணிவரக் கேட்டிருந்த ஒரு சிறுபெண்பிள்

னை ஒருநாள் அவன்பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவேயென்று வேண்டுதல் பண்ணினதையுங் கேட்டு இவன் இருவழிக்குஞ் சாய்ந்திருக்கிற எண்ணத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தாள். சிலநாளித்திரும்பவும் ஒருமுறை அவன் மகா தீமையாகச் சத்தியம் பண்ணினதை அவள்கேட்டுச் சத்தியம்பண்ணுகிறவர்களுக்கு அவர் பிதாவாயிருப்பாரா வென்றாள்! அதற்கவன் யாதொரு உத்தரமுஞ்சொல்லாமல் மிகுந்த ஆச்சரியத்துடனே போய் அன்றுமுதல் ஒருபொழுதுஞ் சத்தியம்பண்ணாமல் நன்மையாய் நடந்து வந்தான். இது குழந்தைகளினுடைய வாயினாலே உமக்குத் துதியுண்டாக்கினீரென்ற வேத வசனத்தின்படி நிறைவேறினதாயிருக்கின்றது.

ஆணையிட்டுத் திட்டுகிறவர்களே, ஐயோ! பராபரன் அவைகளையெல்லாம் விலக்கி இருக்கிறாரென்பதை அறியமாட்டீர்களா? அவர் சத்தியவேதத்திலே பொய்யாணையிடாயாகவென்றும் உன்னாணைகளை நமக்குச் செலுத்துவாயாகவென்றும், வானத்தைக்கொண்டென்கிலும்வேறியாதொன்றைக்கொண்டென்கிலும் சத்தியம் பண்ணாதேயென்றும், மேலுந் நீங்களே உங்களை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகாதபடிக்கு ஆமென்கிறதை ஆமென்றும் அல்லவென்கிறதை அல்லவென்றும் சொல்லக் கடவீர்களென்றும், உங்கள் சத்துருக்களை நேசியுங்கள் உங்களைத்திட்டுகிறவர்களை ஆசிர்வதியுங்கள், உங்களைப்பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள், உங்க

ளை நிந்தைபண்ணுகிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் வேண்டுதல்பண்ணுங்களென்றும் பலபல புத்திமதிகளைச் சொல்லியிருக்கிறாரே. அவைகளைப் பாராமல் மனம்போனபோக்கிலே போய்ப் பராபரனுடைய கிருபையை இழந்துவிடாமல் அதைப் பெறும்படி அவரைப் பார்த்து மன்றாடுகிறதிலே முயத்சியாயிருக்கக் கடவீர்கள்.

---

இப்படியே காண்கிற சிலவசனங்கள்.

சத்திய உதடு என்றென்றைக்கும். பொய்நாவோ ஒரு நிமிஷமாத்திரம் நித்கும். வாக். ௰௨. ௰௯,

அவரவர் தங்களுக்கடுத்தவரோடே இச்சக உதடுகளால் அவத்தம் பேசுகிறார்கள். இருமனதாலே பேசுகிறார்கள்.

கத்தர் எல்லா இச்சக உதடுகளையும் பெருமைகளைப் பேசிக்கொண்டிருக்கிற நாவையும் அறுப்பார். ௰௨. சங்கீதம். ௩—௪.

பெருமை அவர்களை ஒரு சரப்பணியைப் போலே பூணும். அவர்கள் கொடுமை அவர்களை ஆடையாபரணத்தைப்போலே மூடும்.

அவர்கள் கண்கள் நிணத்தில் இருந்து பார்க்கின்றது. அவர்கள் மனவேகங்கள் நடந்தேறுகின்றது. பிறரைத் தொய்யப்பண்ணி ஆங்காரமாய் இடுக்கஞ் செய்வதைப் பேசுகிறார்கள். உயரத்திலிருந்து பேசுகிறார்கள்.

தங்கள் வாயை வானத்திலே வைக்கிறார்கள். அவர்கள் நாவின்படியே பூமியிலே நடக்கும்.

அவர்கள் பராபரன் அதை எப்படியறிவார்? உன்னதமானவரில் அதின் அறிவுண்டோ என்கிறார்கள். இதை யறியும்படிக்கு யோசித்தேன்.

ஆனாலும் நான் பராபரனுடைய பரிசுத்த இஸ்தலங்களுக்குட் பிரவேசித்து அவர்கள் கடைக்காரியத்தைக் கவனித்து உணருமளவும் அது என் பார்வைக்கு விதனமாயிருந்தது.

சறுக்கல்களிலே அவர்களை நிறுத்தி அவர்களைப் பாழ்க்கடிப்புகளில் விழப்பண்ணுகிறீர். ஒரு நிமிஷத்திலே எத்தனையாய்ப் பாழாவார்கள். பயங்கரங்களாலே அழிந்து நிருமூலமாவார்கள். ஆண்டவரே நித்திரை தெளிந்தவுடனே சொப்பனமொழியுமாப்போலே அவர்கள் வேஷித்தைப் பட்டிணத்தில் இனமாய்ப் போகப்பண்ணுவீர். எரு. சங்கீ. கூ-௰௧. ௰சூ—உ௰.

பெருமையும் மேட்டிமையுமான அனேகம் பேச்சைப் பேசாதையுங்கள். கடினமான பெச்சு உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். க. சாமுவேல். உ. ரு.

நீ நமக்கு விரோதமாய்க் கொந்தளித்து உன் கலம்பகம் நமது செவிகளில் ஏறினபடியினாலே நாம் நம்முட துறட்டையுன் மூக்கிலும் நம்முட கடிவாளத்தை உன் உதடுகளிலும் போட்டு நீ வந்தவழியே உன்னைத் திருப்பிக்கொண்டு போவோமென்று அவனைக்குறித்துச் சொல்லுகிறார். உ. இராசா. ௰௯. உஅ.

நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்ந்து

மனுஷரின் வீருப்புத்தணியும். ஏசாயா. ௨. ௰௧.

நான் ஒருவனுடைய முகத்தைப் பாராமலும் ஒரு மனுஷனுக்கு இச்சகம் பேசாமலுமிருப்பேனாக.

ஏனெனில் இச்சகம் பேச அறியேன். மற்றப்படி என்னை உண்டாக்கினவர் சீக்கிரத்துக்குள் என்னை எடுத்துக்கொள்வார். யோப்பு. ௩௨. ௨௧. ௨௨.

நாம் உங்களண்டைக்கு நியாயத்தீர்ப்புக்கென்று சேர்ந்து வந்து சூனியக்காரருக்கும் விபசாரருக்கும் பொய்யாணை யிடுகிறவர்களுக்கும், விதவைகளுந் திக்கற்றவர்களுமான கூலிக்காரரின் கூலியைத் திருகுபண்ணுகிறவர்களுக்கும் நமக்குப் பயப்படாமற் பரதேசிக்கு அநியாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாகத் தீவிரமான சாட்சியாயிருப்போம் என்று சேனைகளுடைய கத்தர் சொல்லுகிறார். மல். ௩. ௫.

முற்றிற்று.